# DIOCESAN CIRCULAR LETTERS

No.C.14/2023 25.08.2023

அன்பு அருள்பணியாளர்களே, இறைமக்களே!

உளம் கனிந்த நல்வாழ்த்துகள்!

பெருமகிழ்வான செய்தியோடு உங்களை இச்சுற்றுமடல் வழியாக சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடவுள் அருளால் கடந்த மாதம் நம் மறைமாவட்டத்திற்குத் தாதியர் கல்லூரிக்கான அனுமதியைத் தமிழ்நாடு அரசு வழங்கியது. இப்போது நமது கோட்டாறு மறைமாவட்டத்தின் நீண்ட கால கனவுகளில் ஒன்றான ‘‘மீன்வளக் கல்லூரி’’ அமைப்பதற்கான அரசாணையைத் தமிழக அரசு 21.08.2023, திங்கள்கிழமையன்று வெளியிட்டுள்ளது. தமிழ்நாட்டிலேயே சுயநிதிப்பிரிவில் மீன்வளக் கல்லூரி அமைவது இதுவே முதன்முறை என்பது நமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது.

ஏறக்குறைய இரண்டு ஆண்டு கால மனந்தளரா கடும் முயற்சியினால் இக்கல்லூரி சாத்தியமாகி இருக்கிறது. கடவுளின் அருள் துணையினையும், அன்னை மரியாவின் பரிந்துரையையும், நம் மண்ணின் புனிதர் மறைசாட்சி தேவசகாயத்தின் உடனிருப்பினையையும் இக்கல்லூரி அமைவதற்காக எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளிலும் உடனிருந்ததை என் அனுபவத்தில் நான் உணர்ந்திருக்கின்றேன். ஆகவே நமது மீன்வளக் கல்லூரிக்குப் ‘‘**புனித தேவசகாயம் மீன்வள அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரி**’’ என்று பெயரிட்டு நாம் உவகை அடைகின்றோம். இக்கல்லூரி மிடாலம் பகுதியில் உள்ள ஆமனாட்டாந்தேரியில் அமைய உள்ளது.

மகிழ்வான இவ்வேளையில், நம்மைக் கைவிடாமல் காக்கும் கடவுளுக்கு மேலான நன்றியை இணைந்து செலுத்துவோம். அத்தோடு கல்லூரி அமைவதற்கு அனுமதி வழங்கிய தமிழ்நாடு அரசின் முதல்வர் அவர்களுக்கும், இம்முயற்சியில் நமக்கு மிகவும் உதவிய மீன்வளத்துறை அமைச்சர், அவர்தம் செயலர், பால்வளத்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு சட்டப் பேரவைத் தலைவர், தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் ஆகியோருக்கு மேலான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேவேளையில் இக்கல்லூரி அனுமதிக்கென பெரிதும் துணைநின்றுழைத்த மறைமாவட்ட முன்னாள் மற்றும் இன்னாள் நிர்வாகத்தினருக்கும் பிறருக்கும் என் மனம் நிறைந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இந்நல்வேளையிலே, நமது மீன்வளக்கல்லூரி வளர்ச்சிக்காக நம் மறைமாவட்டம் மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளுக்கும் நீங்கள் அனைவரும் மேலான ஒத்துழைப்பை நல்க அன்புடன் வேண்டுகின்றேன்.

‘‘ஆண்டவரே வீட்டைக் கட்டவில்லையெனில், அதைக் கட்டுவோரின் உழைப்பு வீணாகும்’’ (திபா 127:1) என்பதற்கேற்ப நாம் முன்னெடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் கடவுள் உடனிருந்து ஆசி வழங்குவாராக!

கிறிஸ்துவின் மனநிலையில்

Sd/-

**+ ஆயர் நசரேன் சூசை**